ENC-6-TA

# இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் ஊக்கம் - நிகழ்ச்சி 6

நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் தேவன் உங்களை ஊக்குவிக்கும் அனுபவத்தை பெற விரும்புகிறீர்களா? பெரும்பாலானவர்கள் ஒவ்வொருநாளும் உலகத்தையே தங்கள் தோள்களில் சுமந்து நடப்பது போன்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை சோர்வடையவும் குழப்பமடையவும் செய்யும் பிரச்சனைகள் சூழ்ந்திருப்பதை உணர்கிறார்கள். அவர்கள் அதிகமாக கவலை படுகிறார்கள். வாழ்க்கையே கைமீறி போனது போல தோன்றுகிறது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு கடினப்படுவதோடு சந்தோஷமாக இருப்பது அரிதானதாக காண்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? மற்றவர்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கலாம். உங்கள் கடந்த கால பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று உங்களுக்கு எப்படி நிச்சயமாக தெரியும்? அல்லது, நீங்களே கேட்டிடலாம், “ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதும் கிறிஸ்துவின் சந்தோஷத்தை அனுபவித்து ஒவ்வொரு நொடியும் சமாதானத்தோடு இருப்பது எப்படி?

ஜான் அன்கெர்பேர்கின் இந்த நிகழ்ச்சியில் நாங்கள் பதிலளிக்க இருக்கும் கேள்வி: “ மரணத்தை எதிர்கொண்டிருப்பவர்கள் மரண பயத்தோடு இருப்பவர்களுக்கு தேவன் என்ன சொல்லுகிறார்? கிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ளவர்கள் மரித்த அடுத்த நொடியில் என்ன நடப்பதாக தேவன் வாக்களிக்கிறார்?” இந்த நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

******

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். இன்றைக்கு நமது நிகழ்ச்சி மரணத்தை எதிர்கொண்டிருந்தும் மரண பயத்தோடு இருப்பவர்களுக்கு தேவன் என்ன சொல்லுகிறார் என பார்க்க இருக்கிறோம். நாம் மரித்த அடுத்த நொடி என்ன நடக்கிறது? இது எனக்கு, ரொம்பவும் நெருக்கமான தலைப்பு, கடந்த பதினோரு மாதங்களில் எனக்கு பிரியமான மூன்று பேர் மரித்திருக்கிராார்கள். முதலில், எனது தந்தை; அடுத்து எனது அத்தை; அடுத்து என் சகோதரனின் 13 வயது மகன். ஒவ்வொரு நாளும், அவர்களுடைய படுக்கையின் அருகில் அமர்ந்து மருத்துவர்கள் அறிவியலின் முன்னேற்றத்தால் மருந்துகளை கொடுக்க முயன்றதை பார்த்திருக்கிறேன், ஆனால் மரணம் தான் சம்பவித்தது. தனிப்பட்ட விதத்தில் நான் வேதனையை அனுபவித்திருக்கிறேன், உங்களில் சிலர் அப்படி இருக்கலாம். அவர்களுடைய அடக்கத்தில், அவர்களை பெட்டியில் வைக்கப்பட்டிருப்பதை கண்டேன், சில்லென்று இருந்த அவர்களை கரங்களை பிடித்து மரணத்தை மிக அருகில் கண்டேன். அவ்வளவு அருகில் இருந்து மரணத்தை பார்க்கும்போது, அது அசிங்கமாக இருக்கும் எதற்காக பயப்படுகிறோம் என்று நம் எல்லாருக்கும் தெரியும். 2 அடக்க ஆராதனைகளில் பிரசங்கித்திருக்கிறேன் அவர்களுக்கு உதவமுடியல நா யோசிக்க ஆரம்பித்தேன், அவங்க இப்ப எங்க இருக்காங்க? அவர்களை நினைவுகூரும்படி நண்பர்கள் உறவினர்கள் கூடி வந்தபோது, நா யோசித்தேன், அவங்க என்ன செய்துட்டு இருப்பாங்க? இப்ப எந்தமாதிரியான அனுபவம் உண்டாகியிருக்கும்?

சரி தேவன் வேதாகமத்தில் இந்த கேள்விகளுக்கு தெளிவான பதிலை தருகிறார். முதலில், வேதம் சொல்கிறது மரணத்தை கண்டு நாம் சந்தோஷப்பட தேவையில்லை. நாம சந்தோஷமா சொல்ல கூடாது, “இதை தான் தேவன் விரும்புகிறார் என்று”. மாறாக, வேதம் சொல்கிறது மரணம் எதிரியாக இருக்கிறது, தேவனுக்கும் நமக்கும் அது எதிரி. உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், “எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிபோடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்.” (1 கொரிந்தியர் 15:25-26)

இது எனக்கு ஆறுதலாக இருக்கிறது. தேவன் நம்மை காட்டிலும் மரணத்தை விரும்பாதவராக இருக்கிறார். அதை அவர் சத்துரு என்கிறார். ஏன் மரணம் தேவனுடைய சத்துருவாக இருக்கிறது? அது ஏன்னென்றால் மரணம் ஜீவனை அழிக்கிறது, அதாவது தேவன் சிருஷ்டிகராக இருக்கிறார், ஜீவனின் அதிபதி அவர்தான். மனிதன் பாவம் செய்ய தீர்மானித்தபோது, தேவனுக்கு விரோதமானான், அவனது பாவம் மரணத்தை கொண்டுவந்தது. வேதம் சொல்கிறது 1 கொரிந்தியர் 15:21, “மனுஷனால் (ஆதாமால்) பாவம் உண்டானது.” ரோமர் 5:12 கூறுகிறது, “ஒரே மனுஷனாலே

பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலம் எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்குள்ளும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று."

மனிதன் பாவம் செய்தப்ப, மரணம் நமக்குள்ளாக பிரவேசித்தது ஒரு குழந்தை விளையாட தெரிந்துகொள்வதற்கு முன்பே அதை அபகரித்த சத்துருவாக மாறினான். இப்போதுதான் தனது வாழ்க்கை அனுபவிக்க துவங்கின வாலிபனின் ஜீவனை எடுத்து அந்த குடும்பத்திற்கு  சத்துருவாக இருக்கிறான். மரணம் புதிதாய் திருமணமான தம்பதியரின் வாழ்வில் வசந்தம் வீசும்போது மனைவியிடமிருந்து கணவனை பிரித்த சத்துருவாக மாறுகிறது, அன்பான பெற்றோரிடமிருந்து பிள்ளைகளை பிரித்து அவர்களை அனாதைகளாக மாற்றும் சத்துருவாக இருக்கிறது. ஆனால் வேதம் சொல்கிறது கிறிஸ்துவின் மூலமாக, இந்த சத்துவாகிய – மரணம் – எதிர்கொள்ளப்பட்டது, கடைசியில்  கிறிஸ்து இதை முற்றிலுமாக அளித்துபோடுவார் என்று நாம் நிச்சயமாக அறிந்துகொண்டிருக்கிறோம்.

வெளிப்படுத்தல் 21:4ல் வேதம் கூறுகிறது, "அவர்களுடைய  கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை துக்கமுமில்லை அலறுதலுமில்லை வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."

எனது சகோதரனின் 13 வயது மகனுடைய சவ பெட்டியை பார்த்தபோது, அவனது இரட்டை சகோதரனாகிய ஜோசுவாவிடம்   நான் சொன்னேன் ஜோயலின் மரணத்தில் நாம் சந்தோஷப்பட முடியாது. மரணம் ஒரு சத்துரு இயேசு பூமிக்கு வந்ததில் இந்த காரியமும் அடங்கியிருக்கிறது. கிறிஸ்துவின் மீது விசுவாசமாக இருக்கும் அனைவரையும், மரணம் தாக்கக்கூடும், ஆனால் அது நம்மை மேற்க்கொள்வதில்லை. அதாவது, மரணம் நம்மை முற்றிலுமாக ஒழித்துவிடமுடியாது நாம் இல்லாமல் போவது கிடையாது. அதுதான் எல்லாவற்றிற்கும் முடிவு அல்ல.

பவுல் சொல்கிறார் 1 கொரிந்தியர் 15:55-56, "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்." இதற்கு அர்த்தம் என்ன? இதற்கான அர்த்தம்: நாம் பாவம் செய்திருக்கிறபடியால், மரணத்தின் கூரை நாம் அனுபவித்திடுவோம். ஆனால் அது கிறிஸ்தவனை முற்றிலுமாக அழித்துபோடுவதில்லை.

நம்ம எல்லாருக்குமே தேனீ போன்ற கொட்டும் பறவைகளை கண்டால் பயமுன்டாகும் அவை எழிதில் கொட்டும். ஆனால் அதன் கொடுக்கை உடைத்துபோட்டாலும், பார்பதற்கு பயமாகத்தான் இருக்கும், ஆனால் அது இனி தீங்கு செய்வதில்லை. இயேசு கிறிஸ்துவினாலும் அவருடைய வாக்குதத்தத்தினாலும் அவரை விசுவாசிப்பவர்களுக்கு மரணத்திற்கு பிறகு நித்திய ஜீவன் உள்ளது, இப்போது மரணம் எனபது கொடுக்கு நீக்கப்பட்ட தேனீ பூச்சிக்கு ஒப்பாக இருக்கிறது. நம் அனைவருக்கும் இது சம்பவிக்கும், ஆனால் கிறிஸ்தவர்களுக்கு, மரணம் நம்மை மேற்கொள்வதுமில்லை நம்மை அழிப்பதும் இல்லை. அது நாம் அருமையான புதிய வாழ்க்கைக்குள் நித்தியமாக நுழைந்திடும் தருணமாக இருக்கிறது. வேதம் கூறுகிறது, பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்." (ரோமர் 6:23)

மேலும், மரணம் தேவனுடைய அன்பிலிருந்து நம்மை பிரிக்க முடியாது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதுகிறார் ரோமர் 8:38, "மரணமானாலும் ஜீவனானாலும் தேவதூதர்களானாலும் அதிகாரங்களானாலும் வல்லமைகளானாலும் நிகழ் காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும் உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தத சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்."

ஆக முதலில், தேவ வார்த்தை சொல்கிறது, விசுவாசிகளுக்கு, மரணம் ஒரு சத்துரு ஆனால் அதை பகுதி வென்றிருக்கிறோம், அதன் கொடுக்கு நீக்கப்பட்டிருக்கிறது, ஒருநாளில் மரணமானது இயேசு கிறிஸ்துவினால் முற்றிலுமாக பரிகரிக்கப்படும்.

இரண்டாவது, நாம கிறிஸ்தவர்களாய் இருந்தும் நமக்கு தீராத வியாதி இருப்பதாகவும் சில நாட்கள் அல்லது வாரங்கள் அல்லது மாதங்களில் நாம் மரித்துவிடுவோம் என்று சொல்லப்பட்டால் என்ன செய்வது? நமது பயத்தை எப்படி கையாள போகிறோம்? மரணம் என்பது தெரியாதது, இதுவரை அனுபவித்திராத ஒன்று.

சரி, ஒரு பிரயாணம் போகும்போது, வழிக்காட்டியாக ஏதாவது நமக்கு தேவை படும். இந்த வாழ்விலிருந்து அடுத்த உலகத்தில் பிரவேசிப்பதற்கு, நமக்கு நமது இலக்கு இதுதான் என்று தெளிவாக நடத்தி செல்லும் வழிகாட்டி அவசியமாக இருக்கிறது. அது உண்மை, இதற்கு பொருத்தமான வழிகாட்டி தேவ வார்த்தையாகிய வேதாகமம்.

மரணத்திற்கு நிகரான அனுபவத்தை பெற்றிருப்பதாக சொல்லும் நபரை நாம் சார்ந்துக்கொள்ள முடியாது, அதாவது, ஹார்ட் அட்டாக் வந்து பிறகு உயிர்பிழைத்தவருடைய, அனுபவத்தை பகிர்ந்துகொண்டால் நமக்கு போதுமா. அவரை நாம் நம்ப முடியாது. ஏன்? ஏன்னென்றால் வேதம் நமக்கு சொல்கிறது சாத்தானும் அவனுடைய தூதர்களும் நம்மை வஞ்சிக்கும்படியான அனுபவங்களை நமக்கு அளித்திடுவார்கள். வேதம் சொல்கிறது, சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துகொண்டிருக்கிறான். (2 கொரிந்தியர் 11:14) சுமார் 12 மில்லியன் அமெரிக்கர்கள் இதுவரை

மரணத்திற்கு ஏதுவான அனுபவம் பெறாதவர்கள், அவர்களில் பெரும்பாலான ஜனங்கள் ஒளியின் தூதனால் வஞ்சிக்கப்பட்டு தவறான தகவல்களை நம்பிகொண்டிருக்கிரார்கள் – தேவன் வேதாகமத்தில் கூறியிருப்பவைகளுக்கு மாறுதலாக இருக்கிறது – அவர்கள் வாழ்வைப்பற்றிய தவறான கருத்து.

இல்லை, நமக்கு உண்மையாய் மரணத்திரைக்கு பின்னால் இருப்பதை சொல்லக்கூடிய ஒரே நபர் மரித்தவர்கள் தான் மரணத்தை எட்டி பார்த்து வந்தவர்கள் அல்ல. வைக்கப்பட்ட சடலத்தின் சாட்சி, குளிர்ந்துபோய், மூன்று நாட்கள் உறைந்து போய் இருப்பது, மரணத்திலிருந்து உயிர் பெற்று  கல்லறையில் எழுந்த ஒன்று. இதுவரை மரணத்தை வென்ற ஒரே நபர் இயேசு கிறிஸ்து தான். அவருக்கு தான் உரிமை இருக்கிறது, மரணத்திற்கு பிறகு நடப்பதை சொல்வதற்கு அதிகாரம் அவருக்கு தான் உள்ளது. இயேசு என்ன சொல்லுகிறார்?

இயேசு லாசருவின் கல்லறையினிடத்திற்கு வந்த போது, லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகியிருப்பதை கண்டார். லாசருவின் கல்லறைக்கு முன்பாக நின்று இயேசு சொல்கிறார், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும், அவன் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றார்." (யோவான் 11:25-26) என்றென்றைக்குமுள்ள ஜீவனை தர தமக்கு வல்லமை உள்ளது என்று இந்த அறிக்கையை செய்தபிறகு, அவரது அறிக்கையை நிலைபடுத்தும் நிருபணத்தையும் நடப்பித்து காட்டுகிறார். லாசருவை அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழ செய்தார்.

மரணம் நம்மெல்லாருக்கும் தவிர்க்க முடியாததுதான். எதிர்காலத்திற்கு ஒருவரை நம்பியிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவை நம்பாமல் இருப்பதற்கு ஏதாவது காரணங்கள் சொல்ல முடியுமா? அப்போஸ்தலனாகிய யோவான் இறுதி முனை மட்டும் சென்று சொல்லுகிறார், "தேவனை விசுவாசியாதவனோ தேவன் தம்முடைய குமாரனை குறித்து கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரை பொய்யராக்குகிறான். தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்த சாட்சி. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்." (மேலும் யோவான் சொல்கிறார், நீங்கள் ஒன்றை அறிந்து தேவகுமாரனுடைய நாமத்தினமேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு எழுதுகிறேன் என்கிறார். என்னைத்தை அறிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறார்? உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்பதை அறிந்திட வேண்டும்." 1 யோவான் 5:10-13, இருக்கலாம், நம்பிடலாம் என்றல்ல, உங்களுக்கு நிச்சயம் உண்டென்பதை அறிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் மரணத்தை எதிர்கொண்டிருந்தால் அதற்கு பயந்திருந்தாள், தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தை நீங்கள் நம்பும்படி விரும்புகிறார். அவருடைய குமாரனை விசுவாசித்தால் போதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் உங்கள் பாவங்களாய் மன்னிக்கும்படி கேளுங்கள், உங்களுடைய சொந்த இரட்சகராகும்படி சொல்லுங்கள், தேவன் வாக்களிக்கிறார் மரணம் என்பது  அவரோடு பரலோகத்தில் நித்தியமாக இருக்கும் வாழ்விற்கான நிலைமாற்றம் தான். இயேசு சொல்கிறார், "உங்கள் இருதயங்கள் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் இருக்கிறது. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண போகிறேன், அந்த ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினதும் நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி மறுபடியும் வந்து உங்களை அழைத்து செல்வேன்." யோவான் 14:1-3)

அப்போஸ்தலனாகிய பவுல், தனது மரணத்தை குறித்து சொல்லும்போதும், இப்படியாக சொல்கிறார், "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு தனது சரீரத்தை சொல்கிறார்  அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேளையில்லாத (புதிய சரீரம்) நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்த கூடாரத்திலே நாம் தவித்து (வயதாகும்போது வேதனை வலி வருகிறது)  நம்முடைய பரம வாசஸ்தலத்தை தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சயுள்ளவர்கலாயிருக்கிறோம்." 2 கொரிந்தியர் 5:1-3 அதோடுகூட, பவுல் முழு நிச்சயமாக சொல்லுகிறார், (நான்) இந்த தேகத்தை விட்டு  குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறேன்." 2 கொரிந்தியர் 5:8

பவுல் சொல்வதற்கு அர்த்தம் என்ன? அவர்  என்ன சொல்கிறார் என்றால். நாம் மரிக்கும்போது, நமது சரீரம் மண்ணில் புதைக்கபடுகிறது நமது ஆவி தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, வேதத்தில் நமது சரீரம் இளைப்பாறும் கல்லறைக்கும்  மரித்தவர்களின் ஆவி சென்றடையும் சியோலுக்கும் உள்ள வித்தாயசம்  தெளிவாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் பிற்கால வாழ்க்கையை அப்ற்றி சொல்கிற எபியேற பதம் சியோல் என்பது பழைய ஏற்பாட்டில் மட்டும் 65 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சியோல் என்பது பிரிந்துபோன ஆவிகளின் ஸ்தலத்தை குறிக்கிறது. இந்த பகுதியை விளக்கி சொன்னால், அந்த தளத்தில் எல்லாருக்கும் ஒரே விதமான அனுபவம் உண்டாகும் என்று சொல்ல முடியாது. சிலருக்கு அது புகை மண்டலமாக காணப்படலாம். ஆனால் வேறு சிலருக்கு அவர்கள் தேவனோடு சஞ்சரிக்கும் இடமாக இருக்கும்.

சியோல் என்பதற்கு புதிய ஏற்ப்பாட்டின் கிரேக்க வார்த்தை ஹேட்ஸ் என்பதாகும். சியோலை போலவே, ஹேட்ஸ் என்ற வார்த்தை வெறும் கல்லறையை குறிப்பதாக சொல்லப்படவில்லை, ஆனால் இதுவும் உலகத்தை விட்டு பிரிந்துபோன ஆவிகளை குறிப்பதாகும். இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலுக்கு முன்பு, சியோலை பற்றி அவர் விளக்குகிறார், ஹேட்ஸ், மரித்தோரின் தளம், இரண்டு பகுதிகள் கொண்டது என்கிறார்.

லூக்கா 16ல், இயேசு ஐசுவரியாவன் மற்றும் லாசரு என்ற பேருடையவர்கள் பற்றி கூறுகிறார். அவர்கள் மரணத்தை விளக்கியத்திற்கு பிறகு, என்ன நடக்கிறதென்று  இயேசு சொல்கிறார் என்பதை கவனமாக கேட்கும்படி விரும்புகிறேன். “ஐசுவரியாவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் ... பாதாளத்தில் (பழைய ஏற்பாட்டின் சியோல் என்ற வார்த்தையின் கிரேக்க பதம்) இருந்து கண்களை ஏறெடுத்து, வேதனைகளின் மத்தியில் பார்க்கிறான், அங்கு ஆபிரகாமின் மடியில் லாசரு உட்கார்ந்திருக்கிறான். அவன் நோக்கி கூப்பிட்டு, “தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரால் தோய்த்து என் நாவை குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும், இந்த அக்கினிஜுவாலையில் வேதனை படுகிறேன் என்றான்.’ அதற்கு ஆபிரகாம், மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங்காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான் அதை நினைத்துகொள், இப்பொழுதோ அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனை படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு கடந்துபோகவும் அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்கு கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்கு கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.” (லூக்கா 16: 22-26)

இயேசுவின் கதையிலிருந்து, ஒரு கேள்விக்கு பதிலளிக்க முடியும், “இதற்கு எவ்வளவு காலமாகும், நீங்க மரித்த பிறகு, பரலோகத்தில் இருப்போமா நரகத்தில் இருப்போமான்னு தெரிய எவ்வளவு நாளாகும்? இயேசுவின் பதில்: ஐசுவரியாவான் இந்த வாழ்வில் தன கண்களை மூடி திறந்த அடுத்த நொடி அடுத்த உலகில் இருக்கிறான். உடனடியாக நடக்கிறது! அவ்விசுவாசியாக பாதாளத்தில், ஐசுவரியவான் சுயநினைவோடு இருக்கிறான். அவனுக்கு ஆவியின் சரீரம் இருந்தது பேசமுடியும், உணர முடியும், வேதனை அனுபவிப்பது தெரிகிறது. தனது வாழ்நாளை அவனால் நினைத்து பார்க்க முடிகிறது.

அவனுடைய நித்தியம் மாற்றமுடியாததாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆபிரகாம் அவனிடம் சொல்கிறான், “இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு கடந்துபோகவும் அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்கு கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்கு கூடாதபடிக்கு உங்களுக்கும் எங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது.” லூக்கா 16:26. இதற்கு அர்த்தம் மரண வாசலை ஒருமுறை கடந்து சென்றால், உங்கள் நித்திய முடிவு இறுதியாக குறிப்படுகிறது. அதை உங்களால் மாற்றவே முடியாது.

விசுவாசமாயிருந்த லாசருவுக்கு என்ன நடந்தது? இயேசு சொல்கிறார் லாசருவை தேவ தூதர்கள் சுமந்துகொண்டு போய் அடுத்த உலகத்தில், சியோல் அல்லது ஹேட்ஸ், எனப்படும் ஆபிரகாமின் மடியிலே விட்டுவிட்டனர். லூக்கா 16:22 அங்கே அவன் தேற்றப்பட்டு சந்தோஷமாக இருந்தான்.

புதிய ஏற்ப்பாட்டில் சுவாரசயமான விஷயம் கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் பரத்திற்கு ஏறுதல் போன்றவற்றிற்கு பிறகு, மரித்த நீதிமான்கள் இருக்கும் ஸ்தலத்திற்கு விசுவாசிகள் செல்வார்கள் என்று எங்குமே சொல்லப்படவில்லை. இல்லை, விசுவாசிகள் இப்போது நேரடியாக பரலோகத்திற்கு செல்கின்றனர். வேறுவிதமாக சொன்னால், பாதாளத்தின் இரண்டு அடுக்கு ஸ்தலம் இப்போது இல்லை. இன்றைக்கு ஆபிரகாமின் மடி பரலோகத்தில் இருக்கிறது. ஆனால் பாதாளத்தில் தான் மரிக்கும் அநீதிக்காரர்கள் இன்றும் இருக்கிறார்கள். வேதம் சொல்கிறது அந்த பாதாளமும் அதில் உள்ள அனைத்தும், வெளிப்படுத்தல் இருபது பதினாங்கினபடி, நித்திய அக்கினிக்குள்ளாக தள்ளப்படும். வேதாகம் இந்த உலகத்தை தேவன் நியாயந்தீர்க்கும் விதத்தை பயமுறுத்தும் இந்த வார்த்தைகளினால் விவரிக்கிறது. “சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினி கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக்  காணப்படாதவன் எவனோ அவன் அக்கினி கடலிலே தள்ளப்பட்டான்.” வெளிப்படுத்தல் 20:13-15

******

உத்தரிப்பு ஸ்தலம் இருப்பதாக வேதம் போதிப்பது இல்லை. வேதத்தில் தற்காலிக தண்டனை பகுதி என்றும் ஜனங்கள் கொஞ்ச காலம் தண்டிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பரலோகத்தில் பிரவேசிக்கும் முன் 1ஆயிரம் அல்லது பத்தாயிரம் ஆண்டுகள் வேதனை படுவார்கள் என்று சொல்லப்படவில்லை. இல்லை, வேதம் சொல்கிறது இந்த பாதாளமானது ஒருநாள் அக்கினி கடலிலே தள்ளப்படும், ஆனால் ஒரே வித்தியாசம் என்னன்னா பாதாளத்தில் இருப்பவர்கள் நரகத்தில்

தள்ளப்படுவார்கள். ஆனா தண்டனையில் எந்த வித மாற்றமும் இருக்காது. அவிசுவாசிகளாக மரிப்பவர்கள் எந்தவிதத்திலும் நரகத்தின் பங்காக இருக்கும் நித்திய வியாகுலம் வேதனைக்கு தப்பித்துகொள்ள வழியே இல்லை. எனக்கு அது எப்படி தெரியும்? அப்போஸ்தலனாகிய பேதுரு வசனத்தில் அதை தெளிவாக கூறியிருக்கிறார், " தேவன் அறிந்திருக்கிறார்... அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்." 2 பேதுரு 2:9

சிலர் கேட்கலாம், "என் சரீரத்திற்கு என்ன நடக்கும்? நான் மரிக்கும்போது என் ஆவிக்கு என்ன சம்பவிக்கும்?" யாக்கோபு கூறுகிறார், "ஆவியில்லாத சரீரம் செத்தது." யாக்கோபு 2:26, அதாவது, சரீரம் மண்ணுக்கு திரும்புகிறது நீங்கள் கிறிஸ்தவராக இருந்தால், உங்கள் ஆவி அதை தந்த தேவனிடம் செல்லும். "இந்த தேகத்தை விட்டு பிரிந்ததும் உடனே கர்த்தரோடு குடியேருகிறோம்." 2 கொரிந்தியர் 5:8

ஆனால் இன்னொரு பக்கம், நீங்க அவிசுவாசியாக இருந்தால், உங்கள் விசுவாசத்தை நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மீது வைக்காதிருந்தால் அவர் சிலுவையில் செய்ததை நம்பாவிட்டால், உங்கள் சரீரம் மண்ணுக்கு திரும்பும் உங்கள் ஆவியோ நம்பிக்கை இல்லாத வியாகுலமும் வேதனையும் நிறைந்திருக்கும் பாதாளத்திற்கு சென்றிடும்.

வேதம் இன்னொன்றையும் சொல்கிறது கிறிஸ்து வரும்போது, அவரை விசுவாசித்தவர்கள் யாவரும், அவர்களுடைய ஆவி அவர்கள் சரீரத்தோடு இணைக்கப்படுவார்கள். ஆனால் தேவன் அவர்களுக்கு உயிர்த்தெழுந்த புதிய சரீரத்தை அளித்திடுவார். 1 தெசலோனிக்கேயர் 4:14,16-17 கூறுகிறது, "இயேசுவானவர் மரித்த பின்பு எழுந்தார் என்று விசுவாசிக்கிறோமே அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டுவருவார்... கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அதன் பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுவோம்." அதனால் தான் இயேசு சொல்கிறார் யோவான் 6:40ல், "குமாரனை கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும் நான் அவனை கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது."

நீங்க அவ்விசுவாசியாக இருந்தால், மரணம் பயம் இருக்கும் ஏன்னா மரித்த பிறகு உங்களுக்கு சம்பவிக்கப்போவது அப்படிப்பட்ட காரியங்கள் தான். மரண பயத்திற்கு ஒருவர் விலகியிருப்பது எப்படி? கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். எபிரேயர் 2:15 கூறுகிறது ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் இயேசு வந்தார்.

பொதுவாக நமக்கு மரண பயம் இருக்கும் ஏன்னா மரணத்திற்கு பிறகு என்ன நடக்குன்னு தெரியாது. மரணத்தை கண்டு பயப்படுவோம் காரணம், தேவன் இருப்பாரேயானால், அவரை சந்திக்க நாம் விரும்பிட மாட்டோம். அவருடைய தரத்திற்கு ஈடாக நிற்க முடியாதென்று பயப்படுவோம். அந்த பயம் உங்களுக்கு இருந்தால், வேதாகமும் அதை ஏற்றுகொள்கிறது. நம்மில் ஒருவர் கூட தேவனுடைய தரத்திற்கு ஈடாக இருக்க முடியாது. நாம் எல்லாருமே பாவிகள்தான். அதனால் தான் தேவன், நம்மை நேசிக்கிறவர், "தமது சொந்த குமாரனை இந்த உலகத்தில் அனுப்பினார், உலகத்தை ஆக்கினைகுள்ளாக்க அல்ல, அவர் மூலமாய் உலகம் இரட்சிக்கப்படும்படி அனுப்பினார்." யோவான் 3:17. வேதம் சொல்கிறது தேவன் நமக்கு ஒரு ஈவை தர விரும்புகிறார். "தேவனுடைய ஈவோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவனாய் இருக்கிறது." ரோமர் 6:23

ஒருவேளை நீங்கள் வேதனையோடு இருந்தால், தேவனுடைய இந்த வாக்குத்தத்தங்கள் எனக்கு பெரும் உதவியாக இருந்திருக்கிறது. அதை சிந்தியுங்கள் இன்னொரு காரியத்தையும் உங்களுக்கு சொல்லுகிறேன். தேவன் நினைவுகூரும்படியாக கூறுகிறார், நமக்கு பிரியமானவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாக மரித்திருந்தால், அவங்க இதுவரை இல்லாத ஒரு நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். என்னுடைய அப்பாவை நினைக்கிறேன், என்னோட அத்தை, எனது சகோதரனின் 13 வயது மகனை நினைக்கிறேன், ஒருவேளை அவர்கள் விமானத்தில் பஹாமாஸ் சென்றிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவந்தால், அவங்க இப்ப கடற்கரையில் அருமையாக நீச்சல் அடித்துக்கொண்டு இருப்பார்கள் என்று எனக்கு தெரியும், அழகான கடற்கரையில், இருப்பாங்க அவங்கள மிஸ் பண்ணுவேன், ஆனா பெரிய பாதிப்புகள் இருக்காது. அவங்க சந்தோஷமா இருக்காங்கன்ற எண்ணம் எனக்கு உண்டாயிருக்கும். அவங்களோட போயிருக்கலாம் என்று யோசிப்பேன். சரி, உங்களுக்கு பிரியமானவர்கள் கிறிஸ்துவுக்குள் மரித்திருப்பார்களானால், அவங்க பஹாமாசை விட சிறந்த இடத்தில் இருக்கிறார்கள். அவங்க பரலோகத்துல இருக்காங்க, பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உள்ளது.

இயேசு சொல்கிறார், "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கும் என்னை அவை அறிந்திருக்கிறது; அவைகள் என்னை பின்பற்றும். அவைகளுக்கு நான் நித்திய ஜீவனை அளிக்கிறேன் அவை ஒழிந்துபோவது இல்லை, ஒருவனும் என்ன கரங்களில் இருந்து பரிப்பதுமில்லை." யோவான் 10:27-28

அப்போஸ்தலனாகிய பவுல் பரலோகத்தை பற்றி சொல்ல முயற்சிக்கும்போது, அதை விவரித்து சொல்ல வார்த்தைகள் இல்லாமல் தடுமாறுகிறார். அவர் சொல்கிறார், "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை

கண் காணவுமில்லை செவிகள் கேட்கவும் இல்லை அது மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.” 1 கொரிந்தியர் 2:9

கிறிஸ்துவுக்கே நன்றி, மரண பயத்திற்கு நாம் நீங்கலாகி இருக்க முடியும். நம்முடைய இறுதி முடிவு பரலோகம்தான் என்று நிச்சயத்தோடு இருக்கலாம். உங்களுக்கு பிரியமானவர்கள் கிறிஸ்துவோடு இருந்திருந்தால், நீங்களும் அவங்களோடு இருப்பீங்கன்ற நம்பிக்கை இருக்கும், மறுபடியும் அவர்களை பார்ப்போம். இப்போது அவர்கள் கிறிஸ்துவோடு இருக்கிறார்கள்.

ஒருவேளை தேவனை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளாமல் இருந்திருக்கலாம் உங்களுக்கு பிரியமானவர்களை இழந்திருக்கலாம், அவர்களை நீங்கள் மறுபடியும் பார்ப்பது இயலாத காரியம். மரணத்திற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். நாமும் ஒருநாள் மரிப்போம் என்று தெரியும், ஆனா அது எப்போதென்று தெரியாது. வேதம் சொல்கிறது என்ன விதமான நித்திய வாழ்க்கையை பெறவேண்டும் என்கிற தீர்மானிக்க இந்த பூமியில் வாழும் நாட்களில் தேவன் நமக்கு சந்தர்ப்பத்தை தருகிறார். குறிப்பாக முக்கியமான தீர்மானம் எதுவென்றால் நாம இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரட்சிப்பின் ஈவை பெறப்போகிரோமா அல்லது அதை விசுவாசிக்காமல் நித்தியமாக பரலோக தேவனை விட்டு நிரந்தரமாக பிரியப்போகிரோமா.

இப்போதே உங்கள் பாவங்களை தேவன் மன்னிக்கும்படி விரும்பினாலோ, உங்கள் வாழ்வில் அவர் பிரவேசிக்க விரும்பினாலோ, இப்போது உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன் என்னோடு இணைந்து இந்த ஜெபத்தை எனக்கு பின் சொல்லும்படி உங்களை ஊக்குவிக்கிறேன். சரி தயாரா. தேவனிடத்தில் ஏறேடுத்திடலாம், அவர் செவிகொடுப்பார்.

அன்பின் இயேசுவே, நான் ஒரு பாவி, ஆனாலும் நீர் என்னுடைய பாவங்களுக்காக சிலுவை மரணத்தை சகித்தீர் என்பதை நம்புகிறேன். இப்போதே எனது வாழ்வில் உம்மை வரவேற்கிறேன் என்னை கிறிஸ்தவனாக மாற்றும். என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னிக்கும்படி வேண்டிகொள்கிறேன். உம்முடைய ஈவாகிய நித்திய ஜீவனை தந்தருளும். விசுவாசத்தில் அதை பெற்றுகொள்கிறேன். உம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே செய்கிறதற்காக உமக்கு நன்றி. ஆமென்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.